அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம் நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 324 | 4 Pages | 19.6.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 324 | 4 பக்கங்கள் | 19.6.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நோயெல்லாநோய்செய்தார்மேலவாநோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்**

**விளக்கம்:**
துன்பம்எல்லாம்துன்பம்செய்தவரையேச் சார்வன, ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புகின்றவர் பிறர்க்கு துன்பம் செய்யார்.

## முக்கிய சுற்றுலா தளங்களில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை கேரள ஐகோர்ட்டு உத்தரவு



திருவனந்தபுரம், ஜூன் 19

கேரள மலையோர பகுதிகளில் உள்ள முக்கிய சுற்றுலா தளங்களில் மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் பொருட்களுக்கு அம்மாநில ஐகோர்ட்டுதடைவிதித்துள்ளது. இது தொடர்பானபொதுநலவழக்கை விசாரித்த கேரள ஐகோர்ட்டு, அக்டோபர் 2ந்தேதி காந்தி ஜெயந்தி தினம் முதல் இந்த தடை அமல்படுத்தப்படும் என தெரிவித்துள்ளது.

கேரள மலையோர பகுதிகளில் 5 லிட்டருக்கு குறைவான குடிநீர் பாட்டில்களை விற்பனை செய்யக் கூடாது என தெரிவித்துள்ள ஐகோர்ட்டு, தண்ணீர் குடிப்பதற்கு ஸ்டீல், காப்பர் டம்பளர்களை பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளது.

இதன்படி தேக்கடி, வாகமண், அதிரப்பள்ளி, சாலக்குடி, நெல்லியம்பதி, பூக்கோடு ஏரிவைத்திரி, வயநாட்டில் உள்ள கர்லாட் ஏரி, அம்பலவயல், வயநாடு பாரம்பரிய அருங்காட்சியகம் ஆகிய சுற்றுலாதளங்களில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலாதளங்கள்தவிர கேரளா முழுவதும் உள்ள அனைத்து திருமண மண்டபங்கள், ஓட்டல்கள் மற்றும் உணவகங்களிலும், அனைத்து அதிகாரப்பூர்வ மத்திய மற்றும் மாநில அரசு விழாக்களிலும் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்து கேரள ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## ஹனிமூன் செல்லும் முன்... காதலனுடன் புதுப்பெண் ஓட்டம்; மகிழ்ச்சி தெரிவித்த கணவர்



படாவன், ஜூன் 19

சமீபத்தில் மத்திய பிரதேசத்தில் தொழிலதிபர் ராஜா ரகுவன்ஷி என்பவர் திருமணம் முடிந்து, தேன்நிலவுக்காக சிரபுஞ்சிக்கு சென்றபோது, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதில், அவருடைய மனைவி சோனம், காதலருடன் சேர்ந்து கூலிப்படையை ஏவி கணவரை கொலை செய்தது விசாரணையில் தெரிய வந்தது.

அந்த பரபரப்பு அடங்குவதற்குள் உத்தர பிரதேசத்தின் படாவன் மாவட்டத்தில் மற்றொரு சம்பவம் வெளிவந்து அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. மவுசம்பூர் இஸ்லாம் நகர் பகுதியை சேர்ந்தவர் சுனில். இவருக்கும் பிசாவ்லி கொத்வாலி பகுதியை சேர்ந்த குஷ்பு என்ற இளம்பெண்ணுக்கும் கடந்த மே 17ந்தேதி திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

அடுத்த நாள் மனைவியை சுனில் தன்னுடைய வீட்டுக்கு அழைத்து சென்றார். 9 நாட்கள் கணவருடன் குஷ்பு ஒன்றாக இருந்துள்ளார். இதன்பின்னர், மணமகளை அவருடைய வீட்டார் அழைத்து சென்று விட்டனர். சுனில், ஹனிமூன் செல்வதற்காக தயாராகும் வேலையில் இறங்கியுள்ளார்.

ஆனால், புதுப்பெண் குஷ்பு 10 நாட்கள் பெற்றோருடைய வீட்டில் இருந்தபோது திடீரென காணாமல் போய் விட்டார். இதனால், அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் பல இடங்களில் அவரை தேடியுள்ளனர். ஆனால், அவரோ காதலரை தேடி சென்று விட்டார். மனைவி காணாமல் போன விவரம் கடந்த 10ந்தேதி சுனிலுக்கு தெரிவிக்கப்பட்டது.

அவர் காதலருடன் சென்று விட்டார் என சுனில் தெரிந்து கொண்டார். மறுநாள் பிசாவ்லி காவல் நிலையத்தில் அவர் புகார் ஒன்றை அளித்திருக்கிறார். இதனைதொடர்ந்து, போலீசார்ஒருபுறம்மணமகளை தேடி வந்தனர். இந்நிலையில், பெண் ஒருவர் புர்கா அணிந்தபடி பிசாவ்லி காவல் நிலையத்திற்கு சென்றுள்ளார். அவர் வேறு யாருமல்ல.

காதலரை தேடி, கணவரை தவிக்க விட்டு விட்டு சென்ற குஷ்பு என போலீசாருக்கு தெரிய வந்தது. இதுபற்றி அறிந்ததும், காவல் நிலையத்தில் ஒன்று கூடிய இரு வீட்டாரும் சமரச முடிவுக்கு வந்துள்ளனர். தங்கம், வெள்ளி உள்ளிட்ட அவரவர் பொருட்களை திருப்பி கொடுத்து விட்டனர்.

குஷ்பு, காதலருடனேயே வாழ விரும்புகிறேன் என உறுதியாக தெரிவித்து உள்ளார். காதலருடன் அவர் சென்றும் விட்டார். சுனிலும் அவரை மகிழ்ச்சியாக அனுப்பி வைத்து விட்டார். இதுபற்றி சுனில் கூறும்போது, நல்லவேளை ரகுவன்ஷி நிலை போன்று எதுவும் நேரவில்லை என மகிழ்ச்சியை வெளியிட்டார்.

# அறநிலையத்துறை சார்பில் 49 புதிய திட்டங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



சென்னை, ஜூன் 19

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.217.98 கோடி மதிப்பீட்டிலான 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.21.50 கோடி செலவிலான 33 முடிவுற்ற பணிகளை தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (18.6.2025) தலைமைச்செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 217 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 திருக்கோவில்களில் 49 புதிய திட்டப்பணிகளுக்குஅடிக்கல்நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள் மற்றும் 16 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் பெருந்திட்டப் பணிகளின் கீழ் 86.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம், மலர் மாலை, பூஜை பொருட்கள் மற்றும் வழிபாட்டு பொருட்கள் விற்பனை நிலையம், சுதைவேலைபாடுகளுடன் கூடிய நுழைவு வாயில், அடிப்படை வசதிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம், ஒன்பது நிலை ராஜகோபுரத்தினையும், தேர்வீதியினையும் சுதைவேலைபாடுகளுடன் கூடிய இணைப்புபடி கட்டும் பணிகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குமாரவயலூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் 30.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்டப் பணிகளின் கீழ் சமுதாயக் கூடங்கள், ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி, நவீன வசதிகளுடன் கூடிய கழிவறைகள் மற்றும் குளியலறைகள், முடிகாணிக்கை மண்டபம், திருமண மண்டபம், அன்னதானக் கூடம், செயல் அலுவலர் குடியிருப்பு, திருக்குளம் சீரமைத்தல், வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணிகள்; திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 14.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமை அலுவலக வளாகத்தில் கூடுதல் நிர்வாக கட்டிடம் கட்டும் பணி;

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோவிலில் 12.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு நிலை ராஜகோபுரம், ஐந்து நிலை ராஜகோபுரங்கள் கட்டுதல் மற்றும் மூன்றாம் பிரகாரத்தில் மேற்கு பகுதியில் உபசன்னதிகள் அமைக்கும் பணிகள்;

விழுப்புரம் மாவட்டம், சிங்கவரம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவிலில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி: ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம், அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவிலில் 6.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; மதுரை மாவட்டம், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலில் 5.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பவித்ரபுஷ்கரணி மற்றும் பொய்கை கரைப்பட்டி தெப்பக்குள படிக்கட்டுகள் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்;

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம், அருள்மிகு பயறனீஸ்வரர் திருக்கோவிலில் 4.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், அருள்மிகு வன பத்திரகாளியம்மன் திருக்கோவிலின் உபகோயிலான அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் 3.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், மருதூர், திரு அருட்பிரகாச வள்ளலார் அவதரித்த இல்லம் 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீண்டும் கட்டும் பணி;

சென்னை, பாடி, அருள்மிகு திருவல்லீசுவரர் திருக்கோவிலில் 3.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; திருவண்ணாமலை மாவட்டம், ஆவணியாபுரம், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவிலில் 3.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவிலில் 3.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம், அன்னதானக் கூடம் மற்றும் செயல் அலுவலர் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணிகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், கண்ணம்பள்ளி, அருள்மிகுவெங்கட்ரமண சுவாமி திருக்கோவிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ராஜகோபுரம் புதுப்பித்தல் மற்றும் முன் மண்டபம் கட்டும் பணி;

தென்காசி மாவட்டம், பண்பொழி, அருள்மிகு திருமலைக்கு மாரசுவாமி திருக்கோவிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், திருநாரையூர், அருள்மிகு சுயம்பிரகார ஈஸ்வரர்திருக்கோவிலில் 2.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு, தேவசம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 2.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் 2.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோவிலுடன் இணைக்கப்பட்ட அருள்மிகு கிருஷ்ணன் திருக்கோவிலில் 2.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி;

திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் உபகோயிலான பூம்பாறை, அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோவிலில் 1.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மூன்று நிலை ராஜகோபுரம் கட்டும் பணி; நாமக்கல் மாவட்டம், மோகனூர், அருள்மிகு காந்தமலை பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் 1.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இளைப்பாறும் மண்டபம் மற்றும் விருந்து மண்டபம் கட்டும் பணிகள்; நாமக்கல், அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோவிலில் 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலர் குடியிருப்பு மற்றும்கண்காணிப்பாளர்குடியிருப்பு கட்டும் பணி; தென்காசி மாவட்டம், கரிவலம்வந்தநல்லூர், அருள்மிகு பால்வண்ணநாதசுவாமி திருக்கோவிலில் 1.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் கட்டும் பணி மற்றும் பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி; திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், அருள்மிகு கொண்டத்து காளியம்மன் திருக்கோவிலில் 1.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அன்னதானக் கூடம் கட்டும் பணி; நாகப்பட்டினம் மாவட்டம், பொய்கைநல்லூர், அருள்மிகு சொர்ணபுரீஸ்வர சுவாமி திருக்கோவிலில் 1.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பரவை காய்கறி சந்தை கட்டிடம் கட்டும் பணி என மொத்தம் 217.98 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளைமுதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மதுரை மாவட்டம், வேங்கடசமுத்திரம், அருள்மிகு காட்டுபத்ரகாளியம்மன் திருக்கோவிலில் 3.70 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; சேலம் மாவட்டம், சேலம், அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோவிலில் 3.60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; திருவள்ளூர் மாவட்டம், சிறுவாபுரி, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் 3.14 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட திருக்குளம்;

திருவண்ணாமலை மாவட்டம், புதூர் செங்கம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் 2.78 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதியதிருமணமண்டபம்; 1.98 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் 6 திருக்கோவில் செயல் அலுவலர் அலுவலகங்கள்; 1.80 கோடி ரூபாய் செலவில் 6 இணை ஆணையர் மண்டலங்களில் கட்டப்பட்டுள்ள 15 சரக ஆய்வர் அலுவலகங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம், பூண்டி, அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவிலில் 1.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், பொருட்கள் வைக்கும் அறை மற்றும் காலணிகள் பாதுகாப்பு மையம்; சென்னை, வேளச்சேரி, அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோவிலில் 1.15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டடம்;

திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோவில், திருவண்ணாமலை, அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவில், புரிசை, அருள்மிகு எல்லையம்மன் திருக்கோவில் ஆகிய திருக்கோவில்களில் 1.14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு வளாகம் மற்றும் முடிக்காணிக்கை மண்டபம்; மதுரை மாவட்டம், மதுரை, அருள்மிகு கூடலழகர் திருக்கோவிலில் 99 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் என மொத்தம் 21.50 கோடி ரூபாய் செலவிலான 33 முடிவுற்ற பணிகளை தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆள் கடத்தல் வழக்கில் திருவாலங்காடு காவல் நிலையத்தில் ஆஜரான ஜெகன் மூர்த்தியிடம் 10 மணி நேரமும், ஏடிஜிபியிடம் 18 நேரமும் நடத்தப்பட்ட விசாரணை நிறைவடைந்து வீட்டுக்கு சென்றனர்.






திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு அடுத்த களாம்பாக்கம் பகுதியை சேர்ந்த தனுஷ் என்ற இளைஞர் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் வனராஜா என்பவரின் மகள் விஜயஸ்ரீ என்பவரை 3 ஆண்டுகளாக காதலித்து திருமணம் செய்துகொண்டார். இந்தவிவகாரத்தில் தனுஷ்ஷின் தம்பி சிறுவனை ஏடிஜிபி வாகனத்தில் கடத்தப்பட்ட வழக்கில் ஏடிஜிபி ஜெயராமன் மற்றும் புரட்சி பாரதம் கட்சியின் தலைவரும் கே.வி.குப்பம் தொகுதியின் எம்.எல்.ஏவுமான ஜெகன் மூர்த்தி ஆகியோர் நேற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில், வழக்கை விசாரித்த நீதிபதி, ஏடிஜிபி ஜெயராமனை மட்டும் கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த நிலையில் நேற்றிரவுஏடிஜிபி ஜெயராமன் திருவலங்காடு காவல் நிலையத்தில் ஆஜராகி விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் திருத்தணி டிஎஸ்பி அலுவலகத்தில் மீண்டும் ஆஜராகி விசாரணை நடத்தப்பட்டது. அதே நேரத்தில், புரட்சி பாரத கட்சியின் தலைவர் ஜெகன் மூர்த்தி காலை 9 மணி அளவில் திருவாலங்காடு காவல் நிலையத்தில் விசாரணைக்காக ஆஜரானார். அவரிடம் திருவள்ளூர் டிஎஸ்பி தமிழரசி விசாரணை நடத்தினார். 12 மணி நேர விசாரணைக்கு பின் ஏடிஜிபி ஜெயராமன், மீண்டும் திருவாலங்காடு காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு, காவல் ஆய்வாளர் அறையிலும், ஜெகன் மூர்த்தி உதவி ஆய்வாளர் அறையிலும் தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் திருவள்ளூர் எஸ்பி சீனிவாச பெருமாள், திருவாலங்காடு காவல் நிலையத்திற்கு வந்து இருவரிடமும் விசாரணை நடத்தினார். பின்னர் ஏடிஜிபி 18 மணி நேரம் விசாரணைக்கு பின்னர் விசாரணை நிறைவடைந்து அவரது சொந்த காரில் சென்றார். தொடர்ந்து ஜெகன் மூர்த்தியிடம் விசாரணை நடத்தப்பட்ட நிலையில், கிட்டத்தட்ட 10 மணி நேர விசாரணை நிறைவடைந்த நிலையில், காரில் புறப்பட்டு சென்றார். விசாரணை முடிந்துள்ளததால் வீட்டிற்கு அனுப்பி இருப்பதாகவும் தேவைப்படும் பட்சத்தில் இருவரும் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் எனவும் திருவள்ளூர் எஸ்பி சீனிவாச பெருமாள் தெரிவித்துள்ளார்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு: 9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# நகைக்கடன் மோசடி; சென்னை ஐகோர்ட்டு முன்பு இஸ்லாமியர்கள் தர்ணா போராட்டம்



சென்னை, ஜூன் 19

சென்னை மேற்கு மாம்பலத்தில் செயல்பட்டு வந்த நகைக்கடையில் வட்டியில்லா நகைக்கடன் தருவதாக கூறி ஏராளமான வாடிக்கையாளர்களிடம் பணமோசடி நடைபெற்றுள்ளதாகவும், இது தொடர்பாக அதிகாரிகளிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறி சென்னை ஐகோர்ட்டு வளாகம் முன்பு சுமார் 100க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இது தொடர்பாக கோர்ட்டில் வழக்கு தொடர்ந்த பிறகும், குற்றவாளிகளை தப்பவிட்டுவிட்டார்கள் என்று அவர்கள் குற்றம்சாட்டினர். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் அவர்களது புகார் மனுக்களை ஐகோர்ட்டு தலைமை பதிவாளரிடம் கொடுப்பதற்கு போலீசார் வழிவகை செய்ததை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. இந்தசம்பவத்தில்கோர்ட்டு வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# திருநெல்வேலியில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவான வாலிபர் கைது




திருநெல்வேலி ஜூன் 19

திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு கொலை முயற்சி, அடிதடி போன்ற வழக்குகளில் ஈடுபட்ட கோடகநல்லூரைச் சேர்ந்த அசோக் (வயது 24) கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தார். இவர் நீதிமன்ற விசாரணைக்கு கடந்த 2 1/2 மாதங்களாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்ததால் அவருக்கு நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்துஅசோக்கை சுத்தமல்லி போலீசார் தேடி வந்த நிலையில் நேற்று (17.6.2025) கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் ( AITUC ) மாநில நிர்வாக குழு கூட்டம் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது




தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் ( AITUC ) மாநில நிர்வாக குழு கூட்டம் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய இச்சங்கத்தின் மாநில தலைவர் பெரியசாமி பேட்டி மாநில நிர்வாகிகள் கூட்டம் ஜூலை 9 ல் மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து, தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி நடைபெறும் வேலை நிறுத்தத்தில் டாஸ்மாக் பணியாளர் சங்கம் பங்கேற்பு. வேலை நிறுத்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

மதுபானம் சில்லறை வியாபாரம் செய்வதற்காக ஏறத்தாழ 30 ஆயிரம் பணியாளர்கள், பணி நியமனம் செய்யப்பட்டார்கள். அந்தப் பணியாளர்கள்அனைவரும் ஒப்பந்த பணியாளர்களாக முன்பணம் பெற்று, பாதுகாப்பு வைப்பு நிதி பெற்ற பணியில் அமர்த்தப்பட்டனர்.

22 ஆண்டுகளாக பணியில் இருந்த டாஸ்மாக் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து, காலம் வரை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளும் ஜூலை ஒன்பதாம் தேதி முழு வேலைநிறுத்த போராட்டத்தில் இந்த சங்கம் முன் வைக்கிறது.

தமிழ்நாடு அரசியல் கவனம் செலுத்த வேண்டும். பிப்ரவரியில் காத்திருப்பு போராட்டத்தை மேற்கொண்ட சங்கத்தினருக்கு, பேச்சுவார்த்தையில் அன்றைய மதுவிலக்கத்துறை அமைச்சர் போராட்டம் தேவையில்லை பேச்சுவார்த்தையில் தீர்வு காணலாம் என்று கூறினார்.

அந்த வாக்குறுதியின் படி ஐந்து மாத கால பேச்சுவார்த்தையை தொடர்ந்து அரசு பேச்சுவார்த்தையில் முடிவுகள் எட்டப்படவில்லை.

தமிழ்நாடு அரசு டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளோம்.

டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கைகள் மீது அரசு விரைந்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும்.

டாஸ்மாக் நிர்வாகத்தின் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி படிப்படியாக அதிகரித்து வருகிறது.

இந்த சூழ்நிலையிலும் மே 22 ல் மதுவிலக்கு துறைக்கானமானிய கோரிக்கையில் விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர், டாஸ்மாக் பணியாளர்களுக்கு தொகை 2000 ரூபாய் உயர்த்தப்படும் என சொன்னதாகவும் அந்த அறிவிப்பு நிறைவேற்றப்படவில்லை.

டாஸ்மாக் நிர்வாகத்தின் மீது ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் குற்றசாட்டை பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை சுமத்தினார். இந்த குற்றச்சாட்டை அவர் வைத்த போது, அமலாக்கத் துரை டாஸ்மாக் நிர்வாகத்தின் மீது தாக்குதல் நடத்துவது போல, மார்ச் 6 78தேதிகளில்மேலாண்மை இயக்குனர் அலுவலகத்தை முற்றுகையிட்டு பெண் அலுவலர்கள் உள்ளிட்டு வரை வெளியே செல்ல விடாமல் சோதனை நடத்தினார்கள்.

அதில் கண்டறிந்த விவரங்கள் பற்றி வெளிப்படையாக தெரிவிக்கவில்லை

அண்ணாமலை சொன்ன அரசியல் குற்றச்சாட்டை தான், அமலாக்கத்துறையும் மீண்டும் சொல்கிறது.

அமலாக்கத்துறையின் நடவடிக்கை அரசின் ஒரு துறையின் மீதான நடவடிக்கை என்று கருதிய தமிழக அரசு உயர் நீதிமன்றம் உச்சநீதிமன்றத்திலும் சட்ட போராட்டம் நடத்தியது.

தமிழ்நாடு அரசியல் நடவடிக்கை நாங்கள் வரவேற்கிறோம்.

உச்சநீதிமன்றம், கேள்வி கேட்டபோது அமலாக்கத்துறையும் அவர்களது வழக்கறிஞர்களும் வாய்தா கேட்டதாகவும், அமலாக்கத்துறையின் நடவடிக்கை கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது என்று உச்சநீதிமன்றமும் கருத்து தெரிவித்துள்ளது.

அதையே காரணம் காட்டி பேசுவதும், மதுபான வியாபாரத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் செய்யும் சிறு தவறுகளைரிதுபடுத்துவதும், ஒட்டு மொத்த மக்களையும் கவனத்தை திசை திருப்புவதாகும்.

நியமனம் செய்யப்பட்ட விலைக்கு அதிகமாக ஒரு ரூபாய் கூட விற்கக் கூடாது என்றும், பணியாளர்களிடம் வசூலிக்கும் அபராத தொகை, கோடிக்கணக்கில் வந்து கொண்டிருக்கிறது.

ஊழலின் உறைவிடமாக டாஸ்மாக் நிறுவனத்தை அமலாக்க துறையை பயன்படுத்துவது மலிவான அரசியலை டாஸ்மாக் பணியாளர் சங்கம் கண்டிக்கிறது.

நீதிமன்ற விசாரணை அமலாக்கத்துறை விசாரணை இன்று விசாரணை நிலையத்திற்குள் அவர்களின் பணி இருப்பது, நேரடியான தாக்குதல் போன்றது.

இது தொடர்பாக உச்சநீதிமன்றம் ஒரு நல்ல தீர்ப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். பணியாளர்களின் கோரிக்கைகள் மீதும் அரசியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். வரும் அக்டோபர் இரண்டாம் தேதி காலவரையற்ற காத்திருப்பு போராட்டத்தை துவங்க உள்ளதாகவும் கூறினார்.

# தமிழகத்தில் கனிம சோதனைக்கான ஆய்வகம் அமைக்க வேண்டும் திருமாவளவன்

சென்னை, ஜூன் 19

கீழடி அகழாய்வு ஆய்வறிக்கையை அங்கீகரிக்க மறுத்த மத்திய அரசை கண்டித்து சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் உரையாற்றினார். அப்போது தமிழகத்தில் கனிம சோதனைக்கான ஆய்வகம் அமைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இது குறித்து அவர் கூறியதாவது;


"தமிழகத்தில் கனிம சோதனைக்கான(Carbon Dating) ஆய்வகத்தை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும்.

இதற்கான செலவு ரூ.40 45 கோடிதான் ஆகும். ஆய்வு செய்யப்பட வேண்டிய பகுதிகளில் நாம் அகழாய்வுகளை செய்து அறிக்கை தயார் செய்து கொண்டே இருப்போம்.

மத்திய அரசின் தொல்லியல்துறை அதை ஏற்கும் போது ஏற்கட்டும்."

இவ்வாறுதிருமாவளவன் தெரிவித்தார்

# கொரோனா சிகிச்சைக்கு கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை: தனியார் மருத்துவமனைகளுக்கு தமிழக அரசு எச்சரிக்கை



சென்னை, ஜூன் 19

கோவிட்19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்று கடந்த 2019ம் ஆண்டு உலகம் முழுவதும் பரவி மக்களை அச்சுறுத்தியது. இந்த வைரஸ் பாதிப்பால் பல லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். மேலும் பல கோடி பேர் அந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்தனர்.

இந்த நிலையில் தற்போது மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் இந்தியா உள்பட பல நாடுகளில் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இந்தியாவில் கர்நாடகம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கேரளா, தெலுங்கானா உள்பட பல மாநிலங்களில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் இதுவரை 3,395 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் நேற்று ஒரேநாளில் மட்டும் 685 பேருக்கு தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டு உள்ளதாகவும் மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இதில் கேரளாவில் 1,336 பேரும், மகாராஷ்டிராவில் 467 பேரும், டெல்லியில் 375 பேரும், குஜராத்தில் 265 பேரும், கர்நாடகாவில் பேரும் 234, மேற்கு வங்காளத்தில் 205 பேரும், தமிழ்நாட்டில் 185 பேரும், மற்றும் உத்தரபிரதேசத்தில் 117 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். டெல்லி, கேரளா, கர்நாடகா மற்றும் உத்தரபிரதேசத்தில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர். கொரோனா பரவலை எதிர்கொள்ள அனைத்து மாநிலங்களும் தயார்நிலையில் இருக்க மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. மேலும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கைகள், ஆக்சிஜன், மருந்துகள் கையிருப்பு இருப்பதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொரோனா சிகிச்சைக்கு தமிழ்நாட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் கூடுதல் கட்டணம் அல்லது சிறப்பு கட்டணம் வசூலிப்பதாக தற்போது புகார்கள் எழுந்துள்ளன.

இதனையடுத்து தமிழக பொது சுகாதாரத்துறை, "கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டால் தனியார் மருத்துவமனைகள் மாவட்ட இணை பொது சுகாதாரத்துறை அலுவலகத்தில் தெரியப்படுத்த வேண்டும். சிறப்பு கட்டணமோ அல்லது கூடுதல் கட்டணமோ வசூலிக்கக் கூடாது. வீரியம் இல்லாத கொரோனாவிற்கு கூடுதல் கட்டணம் வசூலித்தால் சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகம் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தனியார் மருத்துவமனைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மின்கம்பம் மாற்ற ரூ.20 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய அதிகாரி கைது




திருப்பூர் ஜூன் 19

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த செந்தில்பிரபு (36 வயது) என்பவர் சாப்ட்வேர் என்ஜினீயராக பணியாற்றி வருகிறார். இவரது தந்தைக்கு கோவை மாவட்டம் நீலம்பூர் ஊராட்சி, முதலிப்பாளையத்தில் நிலம் உள்ளது. அந்த நிலத்தின் நடுவே ஒரு மின்கம்பம் உள்ளது. இதனால் அந்த மின் கம்பத்தை நிலத்தின் ஓரமாக மாற்றுவதற்காக செந்தில் பிரபு குறும்பப்பாளையம் மின்வாரிய அலுவலகத்தில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்தார்.

அந்த மின்கம்பத்தை மாற்றுவதற்கான செலவு ரூ.50 ஆயிரத்தை தாண்டுவதால், அதற்கு செயற்பொறியாளரின் அனுமதி பெற வேண்டியதாக இருந்தது. எனவே அவர் சோமனூர் மின்வாரிய செயற்பொறியாளர் சபரிராஜனை நேரில் சந்தித்துள்ளார். அவர் மின்கம்பம் மாற்றும் பணிக்கு அனுமதி வழங்க ரூ.20 ஆயிரம் லஞ்சமாக கேட்டிருக்கிறார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த செந்தில் பிரபு, லஞ்ச ஒழிப்புத்துறையினரிடம் புகார் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து, லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோமனூர் மின்வாரிய அலுவலகத்தில், ரசாயனம் தடவிய பணத்தை லஞ்சமாகப் பெற்ற, சபரி ராஜனை கையும் களவுமாக பிடித்து கைது செய்து, அவரிடம் இருந்த ரூ.20 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர்.

# சென்னை பெரம்பூரில் லாரி மோதி சிறுமி உயிரிழப்பு



சென்னை, ஜூன் 19

சென்னை கொளத்தூர் பொன்னியம்மன்மேடு பகுதியை சேர்ந்த யாமினி. இவர்தன்னுடைய மகளான 10 வயதுடைய சிறுமி சௌமியாவை பள்ளியில் விடுவதற்காக பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்

அப்போது யாமினி சடனே பிரேக் பிடித்ததால் இருசக்கர வாகனத்தில் இருந்து சிறுமி தவறி கிழே விழுந்துள்ளார். அப்போது பின்னால் வந்துகொண்டிருந்த சென்னை மாநகராட்சி குடிநீர் ஒப்பந்த லாரி மோதி சிறுமி சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். கண் முன்னே மகளை பறிகொடுத்த தாய் கதறி அழுதார். இதனைகண்டு சுற்றி இருந்தவர்களும் கண் கலங்கினர்.

இந்த சம்பவம் தொடர்பாக கீழ்ப்பாக்கம் போக்குவரத்து புலனாய்வுத் துறையினர் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக போக்குவரத்து புலனாய்வுத் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீலகிரியில் டிரோன் உதவியுடன் காட்டு யானைகளை விரட்டிய வனத்துறை



நீலகிரி ஜூன் 19

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள கிராமங்களுக்குள் அவ்வப்போது காட்டு யானைகள் புகுந்து விளைநிலங்கள், வீடுகள் உள்ளிட்டவற்றை சேதப்படுத்தும் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், கூடலூர் அருகே குனில் வயல், எச்சம் வயல் உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் உலா வருவதாக வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற வனத்துறையினர் ஒலியெழுப்பி விரட்டும் அதிநவீன தெர்மல் டிரோன்கள் உதவியுடன் யானைகளை வனப்பகுதிக்கு விரட்டினர்.

# கொலை வழக்கு: இளம்பெண்ணின் எலும்புக்கூடு டி.என்.ஏ. பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு



நெல்லை, ஜூன் 19

நெல்லை மாவட்டம் வடக்கன்குளம் அருகே பழவூரை அடுத்த மாடன்பிள்ளைதர்மம் கிராமத்தைச் சேர்ந்தவர் சிவலிங்கதுரை மகள் கயல்விழி (வயது 28). இவருக்கு திருமணமான 2 ஆண்டுகளில் கணவரை பிரிந்து பெற்றோரின் வீட்டில் வாழ்ந்து வந்தார். கடந்த 5.10.2024 அன்று வீட்டில் இருந்து வெளியே சென்ற கயல்விழி பின்னர் மாயமானார். இதுகுறித்த புகாரின்பேரில், பழவூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

8 மாதங்களாக துப்பு துலங்காத இந்த வழக்கில், தனிப்படை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். இதில், கயல்விழியை மீண்டும் கணவருடன் சேர்த்து வைக்க மாந்திரீக பூஜை செய்வதாக கூறி, கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தைச் சேர்ந்த சாமியார் சிவசாமி (50) பலமுறை பணம் வாங்கினார். இவ்வாறு அவர் மொத்தம் ரூ.5 லட்சத்தை கயல்விழியிடம் வாங்கினார்.

ஆனாலும் அவர் கணவருடன் சேர்ந்து வாழாததால் தனது பணத்தை திருப்பி தருமாறு அடிக்கடி சிவசாமியிடம் கேட்டு வந்தார். எனவே கயல்விழியைக் கொலை செய்து நகைகளை அபகரிக்க சிவசாமி திட்டம் தீட்டினார்.

அதன்படி கயல்விழிக்கு பணத்தை திருப்பி தருவதாக கூறி வரவழைத்த சிவசாமி உள்ளிட்டவர்கள், அவரை காரில் அழைத்து சென்றனர். பின்னர் கயல்விழியின் கழுத்தை நெரித்துக் கொலை செய்து, அவர் அணிந்திருந்த 7 பவுன் நகைகளை பறித்து விட்டு, அவரது உடலை சேரன்மாதேவி அருகே கங்கணாங்குளம் 80 அடி கால்வாயில் வீசிச் சென்றனர்.

இதுதொடர்பாக சிவசாமி, அவருடைய சகோதரி மகனான தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த மாயாண்டி ராஜா (24), வீரவநல்லூரைச் சேர்ந்த பலவேசம் மகன் கண்ணன் (36), கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தைச்சேர்ந்தஜார்ஜ்மனைவி சிவனேஷ்வரி (32) ஆகிய 4 பேரை கைது செய்தனர். கைதான 4 பேரையும் போலீசார் வள்ளியூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். பின்னர் சிவசாமி, மாயாண்டி ராஜா, கண்ணன் ஆகிய 3 பேரையும் பாளையங்கோட்டை மத்திய சிறையிலும், சிவனேஷ்வரியை கொக்கிரகுளம் மகளிர் சிறையிலும் அடைத்தனர்.

இதற்கிடையே கங்கணாங்குளம் 80 அடி கால்வாயில் வீசப்பட்ட கயல்விழியின் எலும்புக்கூடு மற்றும் ஆடைகள் கண்டெடுக்கப்பட்டன. அவை கயல்விழியின் உடல்பாகங்கள் என்பதை உறுதி செய்வதற்காக டி.என்.ஏ. பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும் கயல்விழியின் பெற்றோர், உறவினர்களிடம் ரத்த மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பவும்ஏற்பாடுசெய்துள்ளனர்.

# விமான நிலைய பகுதியில் லேசர் ஒளியை பயன்படுத்தாதீர்: சென்னை விமான நிலையம்



சென்னை, ஜூன் 19

சென்னை விமான நிலையத்தின் மீது கடந்த சில நாட்களாக மர்ம நபர்கள் இரவு நேரங்களில் லேசர் ஒளி அடித்து விமான சேவைக்கு இடையூறு அளித்து வருகின்றனர். குறிப்பாக தரையிறங்கும் விமானங்களின் மீது தொடர்ச்சியாக லேசர் ஒளி அடிக்கப்படுகிறது. கடந்த 2 வாரங்களில் விமானங்களின் மீது 3 முறை லேசர் ஒளி அடிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக விமான நிலைய அதிகாரிகள் அளித்த புகாரின் அடிப்படையில் பரங்கிமலை, கிண்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், சென்னை விமான நிலையம் அருகே லேசர் மற்றும் பலூன்களை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை விமான நிலைய நிர்வாகம் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில்,

சென்னை விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் லேசர் ஒளியை பயன்படுத்த வேண்டாம். லேசர் ஒளிகள், வெப்பக்காற்று பலூன் போன்றவற்றால் விமான பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உண்டாக்கும். விமானம் தரையிறங்கும் போது, விமானியின் பார்வையை பாதித்து, பயணிகள் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும். விமான நிலைய சுற்றுவட்டாரப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. விமானங்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுவது குற்றச்செயல். இதனை மீறி லேசர் ஒளி மற்றும் பலூன்களை பயன்படுத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போதைப்பொருட்களை முழுமையாக ஒழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்: ஜி.கே.வாசன் கோரிக்கை



சென்னை, ஜூன் 19

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துக்கோண்டே போவது மிகவும் வருத்தத்துக்குரியது. இதற்கு காரணம் தமிழக அரசின் செயலற்ற ஆட்சியே. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே 80 வயது மூதாட்டி பாலியல் வன்கொடுமைக்கு ஆளானது கொடுமையிலும் கொடுமை. இதனால் பெண்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மாலையில் நடைபயிற்சி சென்ற மூதாட்டியிடம் மது போதையில் இருந்த 4 பேர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டது மிகவும் வேதனைக்குரியது. இந்த அசம்பாவிதத்தில் ஈடுபட்ட அனைவரையும் கண்டுபிடித்து, வெளிச்சத்திற்கு கொண்டு வந்து உச்சக்கட்ட தண்டனை பெற்றுத்தர வேண்டும். இந்த குற்றச்செயலுக்கு அடித்தளம் டாஸ்மாக் மற்றும் போதைப்பொருட்கள் தான்.

அதாவது குடிப்பவர்கள் எந்த நேரத்திலும் டாஸ்மாக் கடைக்குச் செல்லலாம், எப்பொழுது வேண்டுமானாலும் வாங்கலாம், எந்த இடத்திலும் குடிக்கலாம் என்ற சுதந்திரம் தமிழ்நாட்டில் உள்ளது. இதற்கு காரணம் தமிழக அரசின் அலட்சியப் போக்கு. இதன் அடிப்படையிலேயே பாலியல் தொந்தரவுகள் தொடர்கின்றன.

மூதாட்டியிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட 4 பேருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். அந்த வகையில் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட வேண்டும் என்ற சிந்தனையே இனிமேல் யாருக்கும் வரக்கூடாது. தமிழக அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மூதாட்டிக்கு உயர்தர சிகிச்சை அளித்து குணமடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு போதைப் பொருட்களை முழுமையாக ஒழிக்கவும், சட்டம் ஒழுங்கை முறையாக சரியாக கடைபிடிக்கவும், பெண்கள் பாதுகாப்பாக இருக்கவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் நில பிரச்சினையில் தம்பதிக்கு அரிவாள் வெட்டு: தந்தை, மகனுக்கு சிறை தண்டனை



தூத்துக்குடி ஜூன் 19

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த புலமாடன் மகன் வண்ணமுத்து (வயது 65) மற்றும் அவரது மனைவி உலகம்மாள் ஆகிய இருவரையும் அவர்களது வீட்டருகே வைத்து கடந்த 12.5.2018 அன்று நில பிரச்சினை காரணமாக புதுக்குடி உலகம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த செல்லதுரை பாண்டியன் மகன் மாயாண்டி(எ) ரவி(62) மற்றும் அவரது மனைவி, அவரது மகன் ஜோதி மணிகண்டன்(28) ஆகிய மூன்று பேரும் சேர்ந்து தவறாக பேசி கை, கம்பு மற்றும் அரிவாளால் தாக்கியுள்ளனர். இது தொடர்பாக ஸ்ரீவைகுண்டம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயாண்டி(எ) ரவி, அவரது மனைவி மற்றும் ஜோதி மணிகண்டன் ஆகியோரை கைது செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில்நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி முருகன் இன்று (18.6.2025) குற்றவாளிகளான மாயாண்டி(எ) ரவிக்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.1,000 அபராதமும்,

ஜோதி மணிகண்டனுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.5,000 அபராதமும், மாயாண்டி(எ) ரவியின் மனைவியை விடுதலை செய்தும் தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய ஸ்ரீவைகுண்டம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வெங்கடேசன், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் எல்லம்மாள், விசாரணைக்கு உதவியாக இருந்த முதல் நிலை காவலர் சந்திரா ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

# மா சாகுபடி விவசாயிகள் கோரிக்கைக்குத் தீர்வு கண்ட பிறகு ஆர்ப்பாட்டம் அறிவிப்பதா? அமைச்சர் சக்கரபாணி



சென்னை, ஜூன் 19

மா சாகுபடி விவசாயிகள் கோரிக்கைக்குத் தீர்வு கண்ட பிறகு ஆர்ப்பாட்டம் அறிவிப்பதா என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

'மா' சாகுபடி விவசாயிகளுக்காகதி.மு.க. அரசைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்திருக்கிறது அ.தி.மு.க. மா விவசாயிகள் மட்டுமல்ல அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனைக் காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசு! பழனிசாமி செய்தித் தாள்களைக் கூடப் படிக்காமல் அரைவேக்காட்டுத் தனமாக அறிக்கை விடுகிறார் என தமிழ்நாடு முதல்அமைச்சர் கூறியதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி. உண்ணாவிரதப் போராட்டம் என்ற பெயரில் அரசின் மீது வீணான அவதூற்றைப் பரப்பியிருக்கிறார்.

ஒரு பிரச்சினை எழுந்தால் அதனை உடனடியாகக்கவனித்துத்தீர்வுகாணும் நடவடிக்கையை தி.மு.க. அரசு மேற்கொண்டு வருகிறது. அப்படிதான் மா சாகுபடி விவசாயிகளின் கோரிக்கைவிவகாரத்திலும் தலையிட்டு அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது. அதன்பிறகும்தன்இருப்பை காட்டிக்கொள்ளப்போராட்டம் அறிவித்து அரசியல் ஆதாயம் தேட முயல்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர் மற்றும் மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 1.46 லட்சம் ஹெக்டரில் மா சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 9.5 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. வழக்கமாக 5 முதல் 6 டன் அளவிற்கு உற்பத்தியாகும் மா உற்பத்தி இந்த ஆண்டு பருவ நிலையின் சாதகத்தால் 8 டன்னிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

மாம்பழக் கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மா சாகுபடி விவசாயிகள் இடையிலான முரண்பாடுதான் பிரச்சினைக்கு காரணம். இது தொடர்பாக கடந்த 16ம் தேதி வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், தோட்டக்கலைத் துறை இயக்குநர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர், மதுரை ஆகிய மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் மாம்பழக்கூழ் பதப்படுத்தும் நிறுவனங்கள் இடையே ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில்கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழக்கூழ் கையிருப்பு அதிகம் உள்ளதால், மாம்பழங்களைக் கொள்முதல்செய்யும்தேவைகுறைந்துள்ளதாகப் பதப்படுத்தும் நிறுவனங்கள் சார்பில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தேவை குறைந்துள்ளதாலும் மா உற்பத்தி அதிகமானதாலும் விவசாயிகளிடமிருந்து உரிய விலைக்கு மா கொள்முதல் செய்ய இயலாத நிலை உள்ளது என்றும் சொன்னார்கள். ஜூன் 20ம் தேதிக்கு மேல் விவசாயிகளிடமிருந்து மாம்பழங்களைக் கொள்முதல் செய்து கொள்வதாக பதப்படுத்தும் நிறுவனங்கள் அரசு அதிகாரிகளிடம் உறுதி அளித்துள்ளன.

மா சாகுபடி விவசாயிகளின் நலன் கருதி மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடனடியாகத் தொடங்கவும், மாம்பழக் கூழ் தயாரிக்க பெங்களூரா ரகத்தினைவிவசாயிகளிடம் இருந்து நியாயமான விலையில் கொள்முதல் செய்யவும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தினார்கள். வேளாண்மை உற்பத்தி ஆணையரும் அரசு செயலாளருமான தட்சிணாமூர்த்தி மாம்பழக் கூழ் நிறுவனங்களுக்கு உத்தரவிட்ட செய்தி நேற்றும், இன்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இத்தனைக்கும் பிறகு போராட்டத்தை அ.தி.மு.க. நடத்துகிறது என்றால் அதற்கு அரசியல் காரணம் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

பிரச்சினைக்கு அரசு தீர்வு காணாவிட்டால் அதை எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டலாம். ஆனால், தீர்வு கண்ட பிறகும் நடவடிக்கை எடுத்துவிட்ட பிறகும் உண்ணா விரதப் போராட்டத்தை அறிவிப்பது எதற்காக? மாம்பழங்கள் கொள்முதல் செய்யப்படும் எனச் சொல்லப்பட்ட 20ம் தேதியில் உண்ணாவிரதப் போராட்டத்தை பழனிசாமி அறிவித்தது அரசியல் ஆதாயம் பெறத்தானே!

'இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை' என பழனிசாமி அறிக்கையில் பச்சைப் பொய் சொல்வதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். 'மாம்பழக் கூழுக்கான GST வரியை 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும்' என தி.மு.க. அரசை பழனிசாமி வலியுறுத்துவது எல்லாம் விந்தையிலும் விந்தை. அதற்கான அதிகாரத்தை வைத்திருக்கும் மத்திய பா.ஜ.க.வைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடாமல் அறிக்கை வெளியிடுவதன் மூலம் விவசாயிகளை வஞ்சிக்கும் மோடி அரசைக் காப்பாற்றி தனது அடிமை விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார். மத்திய அரசு என்றால் கொஞ்சல், மாநில அரசு என்றால் எரிச்சல் என இரட்டை வேடம் போடும் கபட வேடதாரி தான் பழனிசாமி!

மா விவசாயிகளின் நலனை மட்டுமல்ல தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனைக் காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசுதான். வேளாண் துறைக்குத் தனி நிதிநிலையை அறிவித்து உழவர் குடி மக்களின் வாழ்வை உயர்த்தப் பாடுபட்டு வரும் திராவிட மாடல் அரசை இந்த அபத்தப் பொய்களால் எல்லாம் அசைத்துக் கூடப் பார்க்க முடியாது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பால சாகித்ய புரஸ்கார், யுவ புரஸ்கார் விருது பெறும் எழுத்தாளர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன் 19

சாகித்ய அகாடமி ஒவ்வொரு ஆண்டும் 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த குழந்தைகளுக்கான இலக்கியப் படைப்புகளுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருதும், 35 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கு யுவ புரஸ்கார் விருதும் வழங்கி வருகிறது.

இந்த நிலையில் 2025ம் ஆண்டுக்கான பால சாகித்ய புரஸ்கார் மற்றும் யுவ புரஸ்கார் விருதுகளைப் பெறும் எழுத்தாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தமிழில் இந்த ஆண்டுக்கான பால சாகித்ய புரஸ்கார் விருது, 'ஒற்றைச் சிறகு ஓவியா' என்ற நாவலுக்காக எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் யுவ புரஸ்கார் விருது 'கூத்தொன்று கூடிற்று' என்ற சிறுகதை தொகுப்புக்காக மதுரையைச் சேர்ந்த எழுத்தாளர் லட்சுமிஹர்க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எழுத்தாளர்கள் சரவணன் மற்றும் லட்சுமிஹர்க்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் குழந்தைகளுக்கு வலியுறுத்தும் 'ஒற்றைச் சிறகு ஓவியா' நூலுக்காக சாகித்ய அகாடமியின் பால சாகித்ய புரஸ்கார் பெறத் தேர்வாகியிருக்கும் எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணனுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊஞ்சல், தேன்சிட்டு, கனவு ஆசிரியர் என தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் முன்னெடுப்புகளிலும் திறம்படப் பங்காற்றி வரும் விஷ்ணுபுரம் சரவணன் இந்த விருதுக்குத் தேர்வாகி இருப்பது கூடுதல் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

அதேபோல, ஆழமான தம் எழுத்துகளுக்கான அங்கீகாரமாகக் 'கூத்தொன்று கூடிற்று & பிற கதைகள்" சிறுகதைத் தொகுப்புக்காக யுவ புரஸ்கார் பெறத் தேர்வாகி இருக்கும் லட்சுமிஹர்க்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருது பெறும் இரு இளம் படைப்பாளிகளும் மென்மேலும் தமிழைச் செழுமைப்படுத்தும் ஆக்கங்களைத் தொடர்ந்து அளிக்க வேண்டும் என வாசிப்பினைப் பெரும் இயக்கமாக முன்னெடுத்து வரும் நமது திராவிட மாடல் அரசின் சார்பில் வாழ்த்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டு மக்களை தினந்தோறும் குழப்பி வருகிறார் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்



சென்னை ஜூன் 19

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

விவசாயிகளின் நலனை காக்க திராவிட மாடல் அரசு 2021 மே மாதம் பொறுப்பேற்ற பிறகு, முதல் அமைச்சரால் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும், வேளாண்மைத் துறை என்பதை வேளாண்மை – உழவர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்து, எண்ணிலடங்காத திட்டங்களின் மூலம் விவசாயிகளின் நலன் காக்கப்பட்டு வருகிறது. முந்தைய அ.தி.மு.க. அரசானது, மத்திய அரசின் 3 வேளாண் சட்டங்களை ஆதரித்தது போன்ற பல்வேறு உழவர் விரோத நடவடிக்கையினால் அப்போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது விவசாயிகள் அனைவரும் எந்தவித போராட்டமுமின்றி மகிழ்ச்சியில் உள்ளநிலையினைபொறுக்கமுடியாத ஆதங்கத்தில் "அன்றாட அறிக்கை திலகம்" எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டு மக்களை தினந்தோறும் குழப்பி வருகிறார்.

அன்றாடம் அறிக்கைப் போர் நடத்தும் எதிர்கட்சித் தலைவர் இன்றைய தினம்மாவிவசாயிகளின் மீது அக்கறை உள்ளது போல் நடித்து அறிக்கை விட்டிருக்கிறார். தமிழ்நாட்டில் அதிக அளவு பயிரிடப்படும் பழப்பயிரான "மா" கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி போன்ற மாவட்டங்களின் பெரும்பாலான விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. இவற்றில் பெங்களூரா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், நீலம், செந்தூரா, அல்போன்சா, ருமானி போன்ற ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

நடப்பாண்டில், பருவநிலை மா உற்பத்திக்கு பெரிதும் உகந்ததாக அமைந்ததால் சராசரி மகசூலான ஹெக்டருக்கு 5 முதல் 6 டன் என்பது எட்டு டன்னுக்கும் மேலாக அதிகரித்து, சந்தையில் வரத்து அதிகரித்தது. இந்த நிலையில், மாம்பழக்கூழ் உற்பத்திக்கென்றே பெருமளவு பயன்படுத்தப்படும் பெங்களூரா ரக மாம்பழம் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கம் அடைந்த சூழல் நிலவியதாக அறிய வந்த உடனேயே கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி நியாயமான விலையில் கொள்முதல்செய்யஅறிவுறுத்தினார்.

இரண்டுகட்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகும், கொள்முதல் செய்யப்படாத நிலையில், மாநில அளவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், மா பதப்படுத்தும் நிறுவனங்களுடன் 16.06.2025 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மா உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன் கருதி மா பதப்படுத்தும் நிறுவனங்கள் மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடன் தொடங்கவும், மாம்பழக் கூழ் தயாரிக்க பெங்களூரா ரகத்தினை நியாயமான விலையில் உடனடியாக உழவர்களிடமிருந்து "மா" பதப்படுத்தும் நிறுவனங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு, மாம்பழக்கூழ் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆவன செய்வதாகத் தெரிவித்து மாம்பழக்கூழ் உற்பத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டு அனைத்து மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களும் பெங்களூரா ரக மாங்கனிகளை கொள்முதல் செய்து வருகின்றனர். விவசாயிகளும் தங்களது மாங்கனிகளை இந்நிறுவனங்களிடம் மாம்பழக்கூழ் தயாரிக்க உரிய விலையில் அளித்து வருகின்றனர். மாங்கனிக்கான விலையும் படிப்படியாக கூடிய விரைவில் அதிகரிக்கும். மாங்கனிகள்கொள்முதல்ஆகஸ்ட் மாதம் இரண்டாம் வாரம் வரை நடைபெறும். எனவே, "மா" விவசாயிகளுக்கு லாபம் கிடைத்திட இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

"மா" தொடர்பான பிரச்சனை முடிவுக்கு வந்து விட்ட நிலையில், இப்பிரச்சனையைப் பெரிதாக்கி அரசியல் செய்ய முயற்சித்த எதிர்க்கட்சிகள், அரசின் முயற்சியால் விவசாயிகள் "மா" விற்பனை செய்வதைப் பொறுக்க முடியாமல் போராட்டம் நடத்துவதாகக் கிளம்பியுள்ளது தேவையற்ற ஒன்று.

எனவே, தமிழ்நாட்டு மக்களின் கவனச்சிதறல்கள் ஏதுமில்லாமல் திராவிட மாடல் அரசுக்கு நாள்தோறும் விவசாயிகளின் ஆதரவு பெருகி வருவது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் ரூட் தல மோதலை தடுக்க 257 இடங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பு



சென்னை, ஜூன் 19

சென்னை புறநகர் ரெயில்கள் மற்றும் அரசு பேருந்துகளில் பயணிக்கும் கல்லூரி மாணவர்களிடையே 'ரூட் தல' விவகாரம் காரணமாக அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன. தற்போது கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களிடையே மோதல் போக்கை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பிரதான ரெயில் நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் கூடுதல் போலீசார் நியமனம் செய்யப்பட்டு, கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி 'ரூட் தல' மோதலை தடுக்க சென்னையில் பேருந்து நிலையங்கள், ரெயில் நிலையங்கள் உள்பட மொத்தம் 257 இடங்களில் போலீசார்தீவிரகண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக அண்ணா நகர் பகுதி முழுவதும் அதிக அளவில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். அதே போல் கீழ்பாக்கம், மெரினா கடற்கரை, நந்தனம், சைதாப்பேட்டை, சென்ட்ரல் ரெயில் நிலையம் உள்ளிட்ட இடங்கள் மற்றும்திருவள்ளூர், ஆவடி உள்ளிட்ட புறநகர் ரெயில் நிலையங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தூத்துக்குடியில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி ஜூன் 19

தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: 2025ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (19.6.2025) காலை 10 மணிக்கு தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் உள்ள முத்து அரங்கத்தில் வைத்து நடைபெறும். எனவே தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தமான குறைகளைத் தெரிவித்து பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# உல்லாசத்திற்கு ஆசைப்பட்டு முதலில் பைனான்சியர், அடுத்து கொத்தனாருடன் இளம்பெண் ஓட்டம்; குடும்பமே எடுத்த விபரீத முடிவு





திண்டுக்கல், ஜூன் 19

முறையற்ற உறவுகளால் கொலை, தற்கொலை உள்ளிட்ட சம்பவங்கள் அரங்கேறுவதுதமிழகத்தில் அதிகரித்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கூட காதலனுடன் செல்ல கணவனை தாக்கி விட்டு தப்பிய பெண் கைது செய்யப்பட்டார். இதே போல நூற்றுக்கணக்கான சம்பவங்களை உதாரணம் கூறலாம் ஆனால் இது போன்ற நடக்கும் சம்பவங்களால் பாதிக்கப்படுவது அப்பாவி குழந்தைகள்தான். அப்படி ஒரு சம்பவம் தான் திண்டுக்கல்லில் அரங்கேறி உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள சின்னகுளிப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் செல்லம்மாள்(65 வயது) இவரது மகள் பவித்ரா (28 வயது). இவருக்கும் பிரபாகரன் என்பவருக்கும் கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு லிக்திக்ஷா (7 வயது), தீதிஷா (5 வயது) ஆகிய 2 பெண்குழந்தைகள் உள்ளனர். பிரபாகரன் என்பவர் அந்த பகுதியில் என்டர்பிரைசஸ் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், பவித்ராவிற்கும் அதே பகுதியை சேர்ந்த பைனான்சியர் ஒருவருக்கும் பழக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கணவர் வீட்டில் இல்லாத நேரத்தில் பைனான்சியருடன்பவித்ரா உல்லாசமாக இருந்ததாக கூறப்படுகிறது. இந்த விவரம் வீட்டில் இருப்பவர்களுக்கு தெரியவர பவித்ராவை கண்டித்துள்ளனர். இதனால் 2 குழந்தைகள் இருப்பதை மறந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவர் வீட்டை விட்டு பைனான்சியருடன் சென்றுவிட்டார். அதன்பிறகு அவருடன் சில நாட்கள் உல்லாசமாக இருந்து வந்துள்ளார். அதன்பிறகு உறவினர்கள் அனைவரும் சேர்ந்து அவருக்கு அறிவுரை கூறி அழைத்து வந்தனர்.

இந்த நிலையில் மோகப்பசியால் தவித்து வந்த பவித்ரா உல்லாசத்திற்கு ஆசைப்பட்டு கரூர் மாவட்டம் பள்ளப்பட்டியை சேர்ந்த கொத்தனாருடன் பழக்கம் ஏற்பட்டது. இது நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. கடந்த சில நாட்களுக்கு முன்புவீட்டுக்குவேலைக்கு வந்த கொத்தனாருடன் பவித்ரா இனிக்க இனிக்க பேசி கள்ளக்காதலை வளர்த்து வந்துள்ளார். வீட்டில் ஆள் இல்லாத நேரத்தில் கொத்தனாருடன் பவித்ரா உல்லாசமாக இருந்து வந்துள்ளார்.

ந்த விவரம் கணவர் மற்றும் குடும்பத்தினருக்கு தெரியவரவே அவர்கள் பவித்ராவை கடுமையாக கண்டித்துள்ளனர். 2 குழந்தைகள் உள்ள நிலையில் இது போன்ற விஷயம் ஊருக்கு தெரியவந்தால் நமது குடும்பதிற்கு அவமானம் என அறிவுரை கூறியுள்ளனர். ஆனால் அதனை எல்லாம் காதில் வாங்கிகொள்ளாமல் இருந்து வந்த பவித்ரா கொத்தனாருடன் இரவில் காதல்ரசம்சொட்டசொட்ட இரட்டை அர்த்தத்தில் செல்போனில் பேசி வந்ததாக கூறப்படுகிறது. இந்தநிலையில் நேற்று திடீரென பவித்ரா மாயமானார். அவரது செல்போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. பவித்ரா கொத்தனாருடன் ஓட்டம் பிடித்த விபரம் அக்கம் பக்கத்தினருக்கு தெரியவந்ததால் வீட்டில் வந்து விசாரிக்க தொடங்கினர். இதனால் மிகுந்த மனவேதனையடைந்த பவித்ராவின் குடும்பம் வீபரீத முடிவை எடுத்துள்ளது.

மனஉளைச்சலில் இருந்த பவித்ராவின் தாய் செல்லம்மாள் தனது பேத்திகள் இருவருடன் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தார். இந்த விவரத்தை தனது தாய் காளீஸ்வரியிடம் கூறவே நானும் உங்களுடன் சேர்ந்து தற்கொலை செய்துகொள்கிறேன் என அவர் கூறியுள்ளார். நேற்று இரவு தூங்க சென்றபோது காளீஸ்வரி மற்றும் செல்லம்மாள் ஆகியோர் தங்கள் மனதை கல்லாக்கிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்த பேத்திகள் 2 பேரையும் தூக்கில் தொங்கவிட்டனர். அதன்பிறகு அவர்களும் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டனர். இரவில் எழுந்து பார்த்த பிரபாகரன் தனது குழந்தைகள் மற்றும் மாமியாரை தேடினார். அப்போது அவர்கள் 4 பேரும் ஒரே அறையில் தூக்கில் பிணமாக தொங்கியதை பார்த்து கதறி அழுதார். பின்னர் இது குறித்து இடையகோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் 4 பேரின் உடல்களையும் மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பிளாஸ்டிக் ஸ்டிராக்கள் பயன்பாட்டுக்கு உணவு பாதுகாப்புத்துறை தடை



சென்னை, ஜூன் 19

பிளாஸ்டிக் ஸ்டிராக்களால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. அவற்றை பயன்படுத்தி விட்டு, முறையாக நீக்குவதில்லை. கண்ட இடங்களில் அவற்றை தூக்கி எறிவதும், குப்பை கூடையில் போடாமல் தெருக்களில் வீசுவதும் அதிகரித்து காணப்படுகிறது. இது முறையாக நீக்கப்படாமல் கழிவுகளாக சேருகிறது.

பரவலாக மழை பெய்யும்போது, அவை மண்ணுக்குள் புதைந்து அதனை கண்டறிய முடியாமலேயே போய் விடுகிறது. அவை மக்கும் தன்மையற்றவை என்பதனால், மண்ணின் தன்மையும் கெடுகிறது. பல வகையிலும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்நிலையில், ஜூஸ் கடைகள், உணவு விடுதிகள்,

இளநீர் கடைகளில் இனி பிளாஸ்டிக் ஸ்டிராக்களை பயன்படுத்த கூடாது என உணவு பாதுகாப்புத்துறை உத்தரவு பிறப்பித்து உள்ளது.

பிளாஸ்டிக்ஸ்டிராக்களை பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை வெளியிட்டு உள்ளது. அவற்றுக்கு பதிலாக பேப்பர் ஸ்டிரா அல்லது சில்வர் ஸ்டிராக்களை பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனை முன்னிட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

19.6.2025

# திருநெல்வேலியில் சிறுமியை கடத்தி பாலியல் வன்கொடுமை: வாலிபருக்கு 5 ஆண்டு சிறை

திருநெல்வேலி ஜூன் 19

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2019ம் ஆண்டு பிரான்சேரி, கீழத்தெருவை சேர்ந்த சீதாராமன் (வயது 31) என்பவர் ஒரு சிறுமியை கடத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.



இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த புகாரின் பேரில் முன்னீர்பள்ளம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு சீதாராமன் மீது போக்சோ சட்டத்தின்கீழ்வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், தற்போது நீதிமன்ற விசாரணை முடிவு பெற்றது. அதில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் நீதிபதி சுரேஷ்குமார், குற்றவாளி சீதாராமனுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் திறம்பட புலன் விசாரணை செய்து, சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த சேரன்மகாதேவி உட்கோட்ட டி.எஸ்.பி. சத்யராஜ், போலீஸ் இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமி மற்றும் முன்னீர்பள்ளம் காவல்துறையினரையும், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் உஷா ஆகிய அனைவரையும் திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் டி.டி.வி. தினகரன்

சென்னை ஜூ 19

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை கோட்டூர்புரத்தில் நான் முதல்வன் திட்ட பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்ட தரமற்ற உணவை உண்டு 10க்கும் அதிகமான பேராசிரியர்கள் மயக்கமடைந்ததாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தை செயல்படுத்துவதற்கான பயிற்சியை வழங்க பல்வேறு மாவட்டங்களில் இருந்து பேராசிரியர்களை வரவழைத்த தி.மு.க. அரசு, அவர்களுக்கான உணவை கூட தரமான முறையில் வழங்காதது கடும் கண்டனத்திற்குரியது. ஏற்கனவே மாணவ, மாணவியர்களுக்கான அடிப்படை வசதியின்மை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் வகுப்பறைகள் என அவல நிலையில் காட்சியளிக்கும் அரசுப் பள்ளிகளை மேம்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காத பள்ளிக்கல்வித்துறையால் அரசுப் பள்ளிகள் மீதான மக்களின் நம்பிக்கையை படிப்படியாக இழக்கச் செய்திருக்கிறது.

இதற்கிடையில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை மற்றும் மதிய உணவுத் திட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் நிலவி வருவதாக புகார் எழுந்திருக்கும் நிலையில், தற்போது பேராசிரியர்களுக்கான உணவையும் தரமற்ற முறையில் விநியோகித்திருப்பது பள்ளிக்கல்வித்துறையின் தொடர் அலட்சியப் போக்கையே வெளிப்படுத்துகிறது.

எனவே, இனியும் அலட்சியம் காட்டாமல் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களாக இருந்தாலும், கல்வி போதிக்கும் ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாக இருப்பதை உறுதி செய்வதோடு, அரசுப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என பள்ளிக்கல்வித்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வார விடுமுறை நாட்களை முன்னிட்டு தமிழகம் முழுவதும் சிறப்பு பேருந்துகள் இயக்கம்




சென்னை ஜூன் 1

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி வித்திருப்பதாவது:

வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம்,மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 20ந்தேதி (வெள்ளிக்கிழமை) 275 பேருந்துகளும், 21ந்தேதி (சனிக்கிழமை) 320 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 20ந்தேதி அன்று 55 பேருந்துகளும், 21ந்தேதி 55 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200சிறப்புபேருந்துகள்இயக்கதிட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 20ந்தேதி மற்றும் 21ந்தேதி 20 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும் ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 6,192 பயணிகளும் சனிக்கிழமை 2,906 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 6,310 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன் பதிவு செய்து பயணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (19.6.2025)




திரிபுஷ்கர யோகம், அமிர்த யோகம் போன்ற இரு சக்திவாய்ந்த யோகங்கள் உங்கள் ராசிக்குள் இருந்து பல நேர்மறை வாய்ப்புகளை உருவாக்குகின்றன — புதிய அறிவு, நல்ல செய்தி, பண வருமானம் மீளீடு போன்றன .




பணம் மற்றும் உடல்நலத்தைப் பற்றி சில சிக்கல்கள் உருவாகலாம்; எச்சரிக்கையாக இருந்து மாற்று உத்திகள் தேடக் கூடும் .




நல்ல செய்திகள் மற்றும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வருகிறது, முழுமையாக நலம்பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கலாம் ,




சந்திராஷ்டமம் காரணமாக இன்று மேலும் கவனம் தேவை. ஆனால் சில நேர்மறை முன்னேற்றங்கள், சமூக புகழ் போன்ற வாய்ப்புகள் உண்டு .




வாழ்க்கையில் முன்னேற்றம். அலுவலகத்தில் உங்கள் கருத்து மதிக்கப்படும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.




நிதான மென தயாராக இருப்பது முக்கியம். ஆக்கப்பூர்வமான வேலையில் ஈடுபடுங்கள்; இதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும் .




உடல் நலமும் பணமும் தொடர்புடைய சிக்கல்களை எதிர்கொள்வீர்கள். தினசரி மாற்றங்களை நிதானமாக எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் .




வேலை, சொத்து, குடும்ப உறவுகளில்சிறந்தமுன்னேற்றத்தை அனுபவிப்பீர்கள். ஆனால் ஜூன் 20ந்வரைஏற்படக்கூடியஷடாஷ்டக யோகத்தின் காரணமாக சொருக்கை மதிப்பீடு செய்யவும்




வேலை மற்றும் சொத்து தொடர்பில் முன்னேற்றங்கள்இருக்கும்.ஆனால் ஜூன் 20ம் தேதி உருவாகவுள்ள யோகத்தை முன்கூட்டியே கவனத்தில் கொள்ளவும் .




மிகப் பலமான ஆற்றலுடன் செயல்படுகிறார். ஆனால் செலவுகளை கவனமாக திட்டமிடுவது முக்கியம்.




வேலை, சொத்து, குடும்பம்—ALL AREAS காணப்படும் முன்னேற்றங்கள் இன்றைக்கு உங்களுக்கு கிடைக்கும்.




சொத்து வாங்குவதற்கான வாய்ப்புகள் உண்டு, ஆனால் திட்டமிட்ட அணுகுமுறை மட்டுமே முன்னேற்றத்துக்கு வழியளிக்கும் .

# தேசிய பவர் லிப்டிங்; தமிழகத்தின் முதல் பெண் நடுவர் நியமனம்

சென்னை, ஜூன் 19

தேசிய பவர் லிப்டிங் போட்டியின் நடுவராக முதன்முறையாக தமிழ்நாட்டை சேர்ந்த வீராங்கனை ஆரத்தி அருண் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். காமன்வெல்த் கூட்டமைப்பு மற்றும் ஆசிய பவர்லிப்டிங் சார்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்று அவர் தங்க பதக்கங்களை வென்றுள்ளார்.



அவர் பல முறை தேசிய சாம்பியனாகவும் மகுடம் சூடியுள்ளார். நடுவராக நியமிக்கப்பட்டது பற்றி ஆரத்தி அருண் கூறும் போது, இந்த பதவியால் என்னுடைய பொறுப்பு அதிகரித்து உள்ளது என்றார்.

விளையாட்டு துறையில் என்னை போன்று பல பெண்கள் தலைமை பெறுப்புகளுக்கு வர வேண்டும் என விருப்பமும் தெரிவித்து உள்ளார்.

அவர்கள் விளையாட்டு துறையை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இனி அப்படிப்பட்ட கதைகளில் நடிக்க மாட்டேன் ரச்சிதா மகாலட்சுமி



நடிகை ரச்சிதா மகாலட்சுமி 'சரவணன் மீனாட்சி' சீரியல் மூலம் தமிழ் ரசிகர்களிடையே அறிமுகமானார். இவர் 2015 ம் ஆண்டு வெளியான உப்புக் கருவாடு என்ற திரைப்படத்தில் நடித்து பிரபலமானார். இவர் தற்போது தமிழ், தெலுங்கு, கன்னட படங்களில் பிசியாக நடித்துவருகிறார்.

இவரதுநடிப்பில்சமீபத்தில்'பயர்,எக்ஸ்ட்ரீம்'ஆகியபடங்கள்வெளியாகின. இந்த படங்களில் இவரது நடிப்பில் பெரிய அளவில் பாராட்டப்பட்டது. அதனை தொடர்ந்து இவர் விக்ரந்துடன் இணைந்து ஒரு புதிய படத்தில் நடித்து வருகிறார்.

'பயர்' படத்தில் நடிகை ரச்சிதா மகாலட்சுமி கவர்ச்சியாக நடித்திருந்தாலும், இனிமேல் கவர்ச்சியான கதைகளில் நடிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளராம். இவர் அடுத்ததாக வெப் சீரிஸில் ஒன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# முதல் முறையாக 2 வேடங்களில் நடிக்கும் அதர்வா



'பாணா காத்தாடி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமானவர் அதர்வா. பரதேசி, இமைக்கா நொடிகள், சண்டி வீரன், ஈட்டி போன்ற படங்களில் தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி தனக்கென தனி ரசிகர்களை கொண்டுள்ளார்.

இவர் தற்போது நெல்சன் வெங்கடேசன் இயக்கத்தில் 'டி.என்.ஏ' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற 20ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. அதனை தொடர்ந்து, 'பராசக்தி, தணல், இதயம் முரளி' ஆகிய படங்களை தன்கைவசம் வைத்துள்ளார்.

இந்த நிலையில், ஆக்சன் கதைக்களத்தில் உருவாகவுள்ள ஒரு புதிய படத்தில் அதர்வா நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். இப்படத்திற்கு 'வலை' என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த படத்தில் நடிகர் அதர்வா முதல் முறையாக 2 வேடங்களில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விரைவில் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நான் வெற்றியாளராக இருக்க விரும்புகிறேன் நடிகர் அஜித்குமார்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் அஜித்குமார். இவரது நடிப்பில் சமீபத்தில் 'குட் பேட் அக்லி' படம் வெளியானது. இந்த படத்தை தொடர்ந்து தனது 64வது படத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்தினை ஆதிக் ரவிச்சந்திரன் இயக்க உள்ளதாகவும், அதில் ஸ்ரீநிதி ஷெட்டி கதாநாயகியாக நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.




'குட் பேட் அக்லி' படத்திற்கு பிறகு கார் ரேஸில் முழு கவனம் செலுத்தி வருகிறார் நடிகர் அஜித்குமார். சினிமா, கார் ரேஸ் இரண்டிலும் ஒரே நேரத்தில் கால் வைக்காமல், 6 மாதம் சினிமாவிலும், 6 மாதம் கார் ரேஸிலும் இருப்பேன் என தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், பேட்டி ஒன்றில் கலந்து கொண்ட அஜித்குமார் பேசியதாவது, "முதன்முதலில் நான் நடிக்க வந்தபோது தமிழ் சரியாக பேசவில்லை. எனது உச்சரிப்பில் ஆங்கில மொழியின் சாயல் அதிகமாக இருந்தது. அதற்கு எழுந்த விமர்சனங்களுக்கு பிறகு எனது பலவீனங்களை சரி செய்ய பயிற்சி எடுத்தேன். அதை சரி செய்தேன். நான் தற்போது அடைந்திருக்கும் நிலைமை அனைவருக்குமே தெரியும்.

சினிமா போலத்தான் கார் ரேஸிங்கிலும் காயங்கள் உண்டாகும். ஆனால், பயிற்சி எடுப்பேன், விரைவாக கற்றுக்கொள்வேன். எனக்கு 54 வயதாகிறது. எனினும் என்னால் முடிந்தவரை கார் ரேஸை தொடர விரும்புகிறேன். கடவுளின் கருணையால் எனக்கு உடல்நிலை நன்றாக இருக்கிறது. பெரிய அளவில் காயங்களின்றி உடன் பணிபுரிபவர்கள் மற்றும் குடும்பத்தினர் ஒத்துழைப்பால் சிறப்பாக இருக்கிறேன்.

கார் ரேஸிங்கில் அஜித்குமார் கார் ரேஸிங் நிறுவனத்தை ஈடு இணையற்ற ஒன்றாக மாற்றுவதே தனது விருப்பம். என்னைக்குறித்துமற்றவர்களின்விமர்சனங்களால்என்னைநானேமதிப்பிட்டுக்கொள்ளமாட்டேன்.நான்வெற்றியாளராக இருக்க விரும்புகிறேன். எனது கடைசி காலத்தில் நான் முயற்சித்தேன், நான் ஏதோ செய்திருக்கிறேன் என்பதில் மகிழ்ச்சி அடைவேன்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மேக்ஸ்வெல் அபார சதம்; நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்திய வாஷிங்டன் ப்ரீடம்




மேஜர் லீக் கிரிக்கெட் தொடரின் 3வது சீசன் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று (இந்திய நேரப்படி இன்று) நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் வாஷிங்டன் ப்ரீடம் லாஸ் ஏஞ்சல்ஸ் நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த வாஷிங்டன் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 208 ரன்கள் எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக கேப்டன் மேக்ஸ்வெல் 49 பந்தில் 106 ரன்கள் எடுத்தார். லாஸ் ஏஞ்சல்ஸ் தரப்பில் கார்ன் டிரை, தன்சீர் சங்கா ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

தொடர்ந்து 209 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த லாஸ் ஏஞ்சல்ஸ் அணி 16.3 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 95 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 113 ரன் வித்தியாசத்தில் வாஷிங்டன் அணி அபார வெற்றி பெற்றது. லாஸ் ஏஞ்சல்ஸ் தரப்பில் சைப் படார் 32 ரன் எடுத்தார். வாஷிங்டன் தரப்பில் ஜேக் எட்வர்ட்ஸ், மிட்செல் ஓவர் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்வோம் ஷர்துல் தாக்கூர்




சுப்மன் கில் தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடரின் முதல் போட்டி வரும் 20ம் தேதி லீட்சில் தொடங்குகிறது. டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து சீனியர் வீரர்களான ரோகித், விராட் ஓய்வு பெற்றுவிட்டதால இளம் வீரரான சாய் சுதர்சன், கருண் நாயர் ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

இந்த அணியில் ஆல்ரவுண்டரான ஷர்துல் தாக்கூரும் இடம் பிடித்துள்ளார். இந்நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்வோம் என ஷர்துல் தாக்கூர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

வித்தியாசமான சவால்களை அளிக்கும் இங்கிலாந்து ஆடுகளங்களில் விளையாடவுள்ளது மிகவும் உற்சாகமாக இருப்பதாக நினைக்கிறேன். இங்கிலாந்தில் நிலவும் வானிலையை முதலாவதாகக் கூறுவேன். சில நேரங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும், சில நேரங்களில் சூரியன் பிரகாசமாக உள்ள நாளாக இருக்கும். வானிலை எப்படி இருப்பினும், வீரர்கள் அதற்கேற்றவாறு தங்களை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்.

அணியில் புதிய ஆற்றல் இருப்பது நல்ல விஷயம். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் நிறைய இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள். அணியில் திறமையான இளம் வீரர்கள் இடம்பெறுவது எப்போதும் உற்சாகமளிப்பதாக இருக்கும். இங்கிலாந்து அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய யுக்தியை பின்பற்றி விளையாடி வருகிறார்கள். வெளிநாடுகளில் தொடர்களைக் கைப்பற்றுவது எப்போதும் சிறப்பான விஷயமாக இருக்கும். இங்கிலாந்தில் நாங்கள் தொடரைக் கைப்பற்றினால், அது ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் மிகப் பெரிய விஷயமாக இருக்கும். இங்கிலாந்தில் தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# பெர்லின் ஓபன் டென்னிஸ்: நவோமி ஓசாகா அதிர்ச்சி தோல்வி



மகளிர் மட்டும் பங்கேற்கும் பெர்லின் ஓபன் டென்னிஸ் தொடர் ஜெர்மனியில் நடந்து வருகிறது. தற்போது முதல் சுற்று போட்டிகள் நடந்து வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான நவோமி ஓசாகா (ஜப்பான்), ரஷியாவின் லியுட்மிலா சாம்சோனோவா உடன் மோதினார்.

இந்த போட்டியின் முதல் செட்டை 63 என்ற புள்ளிக்கணக்கில் நவோமி ஓசாகா கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2வது செட்டை 76 (73) என்ற புள்ளிக்கணக்கில் லியுட்மிலா சாம்சோனோவா கைபற்றினார்.

இதன் காரணமாக வெற்றியாளரை தீர்மானிக்கும் 3வது செட்டில் அனல் பறந்தது. இதில் அபாரமாக செயல்பட்ட லியுட்மிலா சாம்சோனோவா 64 என்ற புள்ளிக்கணக்கில் நவோமி ஓசாகாவுக்கு அதிர்ச்சி அளித்தார்.

இறுதியில் 36, 76 (73), 64 என்ற செட் கணக்கில் நவோமி ஓசாகாவை வீழ்த்தி லியுட்மிலா சாம்சோனோவா அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்ட ஓசாகா தொடரில் இருந்து வெளியேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.